# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (01.02.2017 முதல் 05.02.2017)

அறிக்கை எண் : 009/2017 தேதி: 31.01.2017

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 25° செ முதல் 31°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 26°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 14°செ முதல் 18°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 8°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (01. 01. 2017 முதல் 05. 02. 2017)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலை காணப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19°செ முதல் 20°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 79 முதல் 84 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 71 முதல் 77 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12 முதல் 13 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01.02.17 | 0 | 32 | 20 | 5 | 84 | 77 | 13 | வடகிழக்கு |
| 02.02.17 | 0 | 32 | 20 | 5 | 84 | 77 | 13 | வடகிழக்கு |
| 03.02.17 | 0 | 32 | 19 | 5 | 79 | 71 | 12 | வடகிழக்கு |
| 04.02.17 | 0 | 32 | 19 | 5 | 79 | 71 | 12 | வடகிழக்கு |
| 05.02.17 | 0 | 32 | 19 | 5 | 79 | 71 | 12 | வடகிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ நிலவும் வானிலை காரணமாக மேற்கு தொடர்ச்சி மலையை சார்ந்த பகுதிகளிலுள்ள கால்நடைகளில் அடைப்பான் நோய் தாக்கவாய்ப்புள்ளது. இதனைக் காண்காணித்து அருகிலுள்ள கால்நடை மருத்துவமனையில் தடுப்பூசி போடவும்.
- ✓ இறவை குளிர்காலகம் போடியா பருத்தி இரகத்திலிருந்து காலைபத்துமணி வரை பஞ்சுகளை எடுத்து நிழலில் உலர்த்தி சேமிக்கவும்.
- ✓ அதிகபட்ச வெப்பநிலை 32 டிகிரிசென்டிகிரேட் அளவில் எதிர்பார்க்கப்படுவதால் பிப்ரவரி இரண்டாம் வாரத்தில் கோடை இறவை எள் சாகுபடிசெய்வதற்கு டி.எம்.வி 4, டி.எம்.வி 6 மற்றும் எஸ்.வி.பி.ஆர் 1 ஆகிய இரகங்களில் ஏதாவது ஒன்றை தேர்ந்தெடுத்து விதைக்கவும்.
- ✓ நிலவும் வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் காரணமாக நவரைப்பருவ நெல்லில் குலைநோய் ஏற்படவாய்ப்புள்ளது. தாக்குதல் தென்பட்டால் 500 கிராம் கார்பென்டாசிம் (அ) டிரைசைக்ளசோல் என்ற மருந்தனை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ நிலவும் வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் காரணமாக நவரைப்பருவ நெல்லில் குலைநோய் ஏற்படவாய்ப்புள்ளது. தாக்குதல் தென்பட்டால் 500 கிராம் கார்பென்டாசிம் (அ) டிரைசைக்ளசோல் என்ற மருந்தனை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.